செ.வெ. எண்: 474 நாள்: 11.08.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.8.2012) தலைமைச் செயலகத்தில், 1 கோடியே 64 இலட்சத்து 88 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஏழு கட்டடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், 3 கோடியே 86 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தினால் சேலம் நகரில் 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 2,150 சதுர அடி பரப்பளவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலகக் கட்டடம்; தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், இளங்கலை பட்டம் (B.F.Sc.) பயிலும் மாணவர்களுக்கு 43 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 4,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடம்; மேலும் இக்கல்லூரியில் முதுகலைப்பட்டம் (M.F.Sc.) பயிலும் மாணவியர்களுக்கு 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,200 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடம்; மீன் மற்றும் கடல் பொருட்களை ஏற்றுமதி செய்ய ஏதுவாக 21 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 1,700 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள தரக் கண்காணிப்பு மற்றும் சான்றிதழ் வழங்கும் மையக் கட்டடம்; நாமக்கல் கால்நடை மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் 2,600 சதுர அடி பரப்பளவில் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடைப் பண்ணைப்பயிலக வளாகக் கட்டடம்; மேலும், அவ்வளாகத்திலேயே மாணவர்களுக்கு கறவை மாட்டுப் பண்ணை குறித்த பயிற்சி வழங்க 8 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள பால் கறவையகம்; சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் மாணவர்களுக்கு கணினி வாயிலாக தங்களது கல்வி ஆராய்ச்சி தொடர்பான புதிய வரவுகளை அறிந்து கொள்ளவும், இணையதளம் மூலம் தகவல்களை பெறவும் ஏதுவாக 18 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் செலவில் 35 கணினிகளுடன் கூடிய புதிய ‘‘இணையதளப் பயிற்சிக்கூடம்’’ ஆகியவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், அயல் நாட்டு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் அறிவியல் அறிஞர்கள் தங்கும் வசதிக்கென 14,000 சதுர அடி பரப்பளவில் 1 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் சென்னை, நந்தனத்திலுள்ள பல்கலைக்கழக கோழியின ஆராய்ச்சி மைய வளாகத்தில் புதிய சர்வதேச மாணவர்கள் தங்கும் விடுதிக் கட்டடம்; தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக வளாகத்தில் பேராசிரியர்களுக்கென 1 கோடியே 16 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள நான்கு குடியிருப்புகள் மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள டாக்டர் பி.வி.ராவ் நினைவு கோழியின வளர்ப்புப் பயிற்சி மையம் ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக அடிக்கல் நாட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 11.8.2012